இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024


# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 185 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 02 – வெள்ளிக்கிழமை 14 பிப்ரவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 185 : Thiruvalluvar Year - 2056 - Maasi 02 - Friday 14 February 2025 - Madurai 12 Pages ₹ 5.00

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணியின் கீழ், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அடையாறு ஆற்றின் கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி – 1.218 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து

# மெட்ரோ நிலைய சுரங்கம் தோண்டும் பணி : முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

## பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்!

சென்னை, பிப்.14–

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையப் பகுதியில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணியின் கீழ், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### நாளொன்றிற்கு சராசரியாக 3.1 இலட்சத்திற்கும் மேல் பயணம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அப்போதைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பணிகள் தொடங்கப்பட்ட 54.1 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் இரண்டு வழித்தடங்களில் முழுமையாக பயணிகள் சேவை இயக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நாளொன்றிற்கு சராசரியாக 3.1 இலட்சத்திற்கும் மேல் பயணம் செய்து வருகின்றார்கள்.

### அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலைய பகுதியில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தல்

அதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் கட்டம்II இன் கட்டுமானப் பணிகள், 3 வழித்தடங்களில், 118.9 கி.மீ நீளத்தில் 128 இரயில் நிலையங்களுடன் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இப்பணிக்காக 23 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, கட்டம்IIஇல் மொத்தம் 42.6 கி.மீ நீளத்திலான சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வழித்தடம் 3இல் மட்டும் 26.7 கி.மீ நீளத்தில் மாதவரம் – கெல்லீஸ் மற்றும் கெல்லீஸ் - தரமணி ஆகிய இரண்டு பகுதிகளாக சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இரண்டாவது பகுதியான கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரை வருகிறது.

### பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் முடிக்க முதல்வர் உத்தரவு!

பல்வேறு விதமான மண் தன்மைகள், கடினமான பாறைகள், அதிநீரோட்ட பகுதிகள் மற்றும் நகர்ப்புறத்திற்கென இடர்பாடுகள் ஆகிய சிக்கலான சவால்களை வெற்றிகரமாக சந்தித்து, அடையாறு என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் ஜூன் 2023 இல் சுரங்கம் தோண்டும் பணிகளை கிரீன்வேஸ் சாலை மெட்ரோ நிலையத்திலிருந்து தொடங்கி, அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையத்திற்கு அருகில், அடையாறு ஆற்றின் கீழ் சுமார் 40 முதல் 50 அடி ஆழத்தில் 300 மீட்டர் நீளத்திற்கு அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளிவந்தது. செப்டம்பர் 2024இல் காவேரி என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம், டவுன்லைன் சுரங்கம் தோண்டும் பணியினை முடித்துள்ளது.

சுரங்கம் தோண்டும் இயந்திரம் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளிவந்தது. இந்த முக்கியமான பணியினை முதலமைச்சர் அவர்கள் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இப்பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் முடித்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2025) சென்னை, வளசரவாக்கத்தில் டாக்டர் மணமல்லி அன்பழகன் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள பேராசிரியர் அரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெற்றியழகன், தாயகம் கவி, மருத்துவர் நா. எழிலன், காரப்பாக்கம் க. கணபதி, எம்.கே. மோகன், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, பேராசிரியர் அவர்களின் மகன் அ. அன்புச்செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பாகிஸ்தான் எல்லையையொட்டி எரிசக்திப் பூங்கா அமைக்க மோடி அனுமதி!

# அதானிக்காக தேசப் பாதுகாப்பை ஒன்றிய அரசு ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.14–

பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அதானி நிறுவனம் எரிசக்தி பூங்கா அமைப்பதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதானிக்காக தேச பாதுகாப்பை ஒன்றிய அரசு ஆபத்தில் ஆழ்த்தியிருப்பதாக காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதானி குழுமம், குஜராத்தின் கட்ச் பகுதியின் கவ்டாவில் உலகின் மிகப்பெரிய சூரிய மின் சக்தி ஆலையை அமைத்து வருகிறது. இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காவை பாகிஸ்தான் எல்லையில் இருந்து வெறும் 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைப்பதற்காக, எல்லை பாதுகாப்பு நெறிமுறைகளை ஒன்றிய பா.ஜ. அரசு தளர்த்தியிருப்பதாக இங்கிலாந்தை சேர்ந்த தி கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் இந்த விவகாரம் தேசிய அரசியலில் புயலை கிளப்பி உள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள அறிக்கையில், பா.ஜ.வின் போலி தேசியவாதம் மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தப்பட்டுள்ளது என்று சாடியுள்ளார்.

தனது கோடீஸ்வர நண்பர்கள் பயனடைய வேண்டுமென்பதற்காக, பிரதமர் மோடி நாட்டின் எல்



லைகளில் தேச பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்திவிட்டார் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எல்லை பாதுகாப்பு விதிகளை தளர்த்துவதன் மூலம் பாகிஸ்தானுடனான சர்வதேச எல்லைக்கு அருகில் வெறும் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த நிலத்தை உங்கள் அன்பு நண்பருக்கு பரிசாக அளித்துள்ளீர்கள் என்பது உண்மையா? என்று கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தான் எல்லை மட்டுமல்லாமல், வங்கதேசம், சீனா, மியான்மர், நேபாள எல்லையை ஒட்டிய நிலத்திலும் உங்கள் அரசு இத்தகைய விதிகளை தளர்த்தி உள்ளது. இந்த விஷயத்தில் ராணுவத்தின் கவலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று கார்கே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் எல்லையில் இருந்து எளிதில் தாக்கும் தூரத்திற்கு மிகப்பெரிய தனியார் திட்டத்தை ஏன் அனுமதிக்கிறீர்கள்? என்றும் பிரதமர் மோடிக்கு மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

### நாடாளுமன்றம் ஒத்திவைப்பு!

பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அதானியின் எரிசக்தி பூங்கா அமைக்கப்படுவது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என, மக்களவையில் காங்கிரஸ் எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

மக்களவை நேற்று காலை 11 மணிக்கு கூடியதும், பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அதானியின் எரிசக்தி பூங்கா அமைக்கப்படுவது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ் எம்.பி.க்கள் வலியுறுத்தினர். அதானியின் மின்திட்டத்தை செயல்படுத்த பாகிஸ்தான் எல்லையில் தேசத்தின் பாதுகாப்பு சமரசம் செய்யப்படுவதாக காங்கிரஸ் உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர். இது குறித்து விவாதம் நடத்தவேண்டும் என, காங்கிரஸ் எம்.பிக்கள் அவையின் மைய பகுதிக்கு சென்று முழக்கமிட்டனர். ஆனால், காங்கிரஸ் கட்சியினரின் கோரிக்கையை மக்களவை தலைவர் ஓம் பிர்லா நிராகரித்தார். இதையடுத்து, மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

### இலங்கை அரசு ரத்து செய்தது!

இதனிடையே, இலங்கையின் காற்றாலை மின் திட்டத்திலிருந்து விலக அதானி நிறுவனம் முடிவு செய்துள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

முறையாக டெண்டர் வெளியிடப்படாமல், அதானி நிறுவனத்திற்கு காற்றாலை மின் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதாக புகார் எழுந்தது.

இந்த ஊழல் புகார் எதிரொலியால் அதானி குழுமத்துடனான காற்றாலை மின் உற்பத்தி திட்ட ஒப்பந்தத்தை கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இலங்கை அரசு ரத்து செய்திருந்தது. மன்னார் விடத்தல்தீவு பகுதியில் அதானியின் காற்றாலை மின் திட்டத்திற்கு எதிராக இலங்கை நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இலங்கையில் அதானி காற்றாலை திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என அரசியல் கட்சிகள் போர்க்கொடி உயர்த்திய நிலையில், திட்டத்தை கைவிட முடிவு செய்துள்ளது. ஏற்கனவே, கென்யாவிலும் அதானி நிறுவனத்தின் மின்சார திட்டத்தை அந்நாட்டு அரசு ரத்து செய்துள்ள நிலையில், இலங்கையின் காற்றாலை மின் திட்டத்திலிருந்து விலக அதானி நிறுவனம் முடிவு செய்துள்ளது.

## மாநிலங்களவையில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கை தாக்கல்!

# வக்ஃபு மசோதா: காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

## நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப்.14–

மாநிலங்களவை நேற்று கூடியதும் வக்ஃபு மசோதா மீதான நாடாளுமன்றக் கூட்டுக் குழு அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் திருத்தங்கள் நீக்கப்பட்டது தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர். அப்போது பேசிய மாநிலங்களவை எதிர்க்கட்சித்தலைவர் கார்கே, நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் வாக்கெடுப்பின் மூலம் மசோதா ஏற்கப்பட்டது அரசியலமைப்புக்கு விரோதமானது என குற்றம் சாட்டினார். இதே போன்று, வக்ஃப் வாரிய மசோதாவில் எதிர்க்கட்சிகளின் கருத்துகள் நீக்கப்பட்டதற்கு மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவாவும் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். கூட்டுக்குழுவின் அறிக்கையில் எதிர்க்கட்சிகளின் அதிருப்தி கருத்துக்களை நீக்கியதற்கும் அவர் கண்டனத்தை பதிவு செய்தார்.

கூட்டுக்குழு அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது அதிருப்தி கருத்துகளை கூறியுள்ளனர் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் கருத்துக்களை நீக்கியது ஏன்? என மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியதுடன் ஆதரவு எம்.பி.க்களின் கருத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சி எம்.பி.க்களின் கருத்துக்களை நீக்கியது ஜனநாயகத்திற்கு எதிரானது இதனை வன்மையாக கண்டிக்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

திருச்சி சிவா நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிக்கையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தங்கள் அதிருப்தி கருத்துக்களை கூற முழு உரிமை உள்ளது அந்த அதிருப்தி கருத்துக்களுடன் தான், கூட்டுக்குழு அறிக்கையை தாக்கல் செய்திட வேண்டும் சாதக, பாதக கருத்துக்களுடன்தான் கூட்டுக்குழு அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றார்.

தற்போது அதிருப்தி கருத்துக்கள் நீக்கப்பட்டதற்கு குழுத்தலைவர் எவ்வாறு அனுமதி வழங்கினார் என தெரியவில்லை மேலும் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜு பேச்சுக்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

### வெளிநடப்பு!

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்து நீக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்ததை காங்கிரஸ், தி.மு.க. உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கையை நிராகரிக்க முடியாது என்று அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தெரிவித்தார். இதற்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

### பொய் தகவல்!

பொய் தகவல்களை நாடாளுமன்ற அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவிப்பதாகவும் குற்றம் சாட்டினர். எதிர்க்கட்சிகள் கருத்து தணிக்கை செய்யப்பட்டு சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அரசுக்கு ஆதரவான வழக்கறிஞர்கள், முன்னாள் நீதிபதிகள் உள்ளிட்டோர் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு அழைக்கப்பட்டதாகவும் அவர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, எதிர்க்கட்சி எம்.பிக்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.